# கலாபூஷணம் G.P. பேர்மினஸ்


யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட கிறகோரி பிலிப் பேமினஸ் அவர்கள் ஆரம்பக் கல்வியை குருநகர் சென். ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையிலும் 1950 முதல் 1960 வரை புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கல்விகற்ற வேளை, 1956 இல் 'ஒரு புகையிரத நிலையம்' என்ற நாடகத்தில் நடித்ததன் மூலம் கல்லூரியின் வாழ்வில் தனது கலைவாழ்வை ஆரம்பித்தார். அதனைத் தொடர்ந்து கல்லூரியால் நடத்தப்பட்ட இயேசுவின் திருப்பாடுகள் நிகழ்வில் 1958-1960 களில் முக்கிய பாத்திரமான கைப்பாஸ் பாத்திரத்தில் நடித்தார். அவ்வேளை கல்லூரியில் அருட்பணி நீ. மரியசேவியர் அடிகளாரின் அறிமுகம் ஏற்பட்டது. அதன் பயனாக 'அன்ரனியோ' என்ற இத்தாலிய படம் மொழி மாற்றம் செய்யப்பட்டபோது முக்கிய பாத்திரத்திற்கு குரல் கொடுப்பதற்காக மரியசேவியர் அடிகளால் தெரிவுசெய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து பல சமூக நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார்.

1966இல் உரும்பிராயில் திருப்பாடுகளின் காட்சி மேடையேறியபோது அருட்பணி நீ. மரிய சேவியர் அடிகளாரின் விசேட அழைப்பின் பேரில் யாழ்ப்பாணத்தில் இருந்து பங்குபற்றினார். திருமறைக் கலாமன்றம் உருவாகிய காலத்திலிருந்தே அதனோடு இணைந்து, அவரின் முக்கிய சீடருள் ஒருவனாய் இன்று வரை பணியாற்றி வருகின்றார். இவ்வாறு கடந்த ஐம்பது ஆண்டுகளாக நாடகத்துறையில் ஈடுபட்டுழைப்பவர். திருமறைக் கலா மன்றத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரான இவர் திருமறைக் கலாமன்றம், நாடக அரங்க கல்லூரி போன்றவற்றில் பயிற்சி பெற்று பல்வேறு நாடகங்களிலும் நடித்தவர். பல நாடகங்களையும் நெறியாள்கை செய்தவர்.

திருமறைக் கலாமன்றத்தின் 'அன்பில் மலர்ந்த அமரகாவியம்', 'களங்கம்', 'பலிக்களம்' போன்ற பல்வேறு திருப்பாடுகளின் காட்சிகளில் நடித்திருப்பதோடு அவற்றினை நெறிப்படுத்தியும் வந்துள்ளார். முதல் வீடியோ திரைப்படமான பலிக்களத்திலும் இவரின் நடிப்பு பாராட்டத்தக்கது. யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி புதுக்குடியிருப்பு. அளம்பில், ஹப்புத்தளை, மன்னார் போன்ற இடங்களிலும் இவர் நெறிப்படுத்தி மேடையேற்றியுள்ளார். அது மட்டுமன்றி, பல்வேறு நவீன நாடகங்களையும் நெறிப்படுத்தியுள்ளார். கொழும்பில் சிங்கள நாடகக் கலைஞர்களுடன் இணைந்து இயக்குநர் நீ. மரியசேவியர் அடிகள் கலைப்பாலம் அமைத்தபோது, காலம் சென்ற பேராசிரியர் எதிர்வீர சரத்சந்திரா, மெராண்டா ஹேமலதா மற்றும் பல சிங்களக் கலைஞர் குழுவுடன் இணைந்து 'அசோகா', 'தர்ஷனா', போன்ற வார்த்தைகளற்ற நாடகங்களின் உதவி நெறியாளராக பணியாற்றியும், ஆடை வடிவமைப்பினை மேற்கொண்டும், நடித்தும் தென்னிலங்கையில் பலரதும் பாராட்டுகளைப் பெற்றிருப்பவர்.

அவ்வாறே நாடக அரங்கக் கல்லூரியின் புகழ்பெற்ற நாடகங்களான 'புதியதொரு வீடு', 'பொறுத்தது போதும்', 'உறவுகள்', 'கூடி விளையாடு பாப்பா', 'கோடை', 'தியாகத் திருமணம்', 'சங்காரம்', 'வெறியாட்டு' போன்ற நாடகங்களில், தாசீசியஸ், குழந்தை ம. சண்முகலிங்கம், மௌனகுரு, கவிஞர் முருகையன் போன்ற பிரபல நெறியாளர்களின் கீழ் நடித்து பலரது பாராட்டுக்களையும் பெற்றவர். நாட்டுக்கூத்து, இசைநாடகம், நவீன நாடகம், இலக்கிய நாடகம், வரலாற்று நாடகம், யதார்த்த நாடகம், மௌன நாடகம், வீதிவழி நாடகம், சிறுவர் நாடகம், வட்டக்களரி போன்றவற்றில் நடித்து நெறியாள்கையும் செய்துள்ளார். மேலும் களப் பயிற்சி, நாடகப் பயிற்சிகளை முறையாசிரியர்கள், பாடசாலைகள், குருமட மாணவர்களுக்கு வழங்கி வந்தார்.

இவற்றுடன் 1974 இல் நடைபெற்ற உலகத்



தமிழாராய்ச்சி மகாநாட்டிலும் திருமறைக் கலாமன்றம் சார்பாக நாடகத்தில் பங்கு கொண்டார். மாபெரும் புறப்பாடாகிய 1995 ஒக்கோபர் 30 இன் நிகழ்வை அடியொற்றி, திரு P.S. அல்பிறற் எழுதிய 'சாகாத மனிதம்' என்ற நாடகத்தில் நடித்ததோடு, நெறிப்படுத்தியும் உள்ளார். இந்நாடகம் பலரது உள்ளத்தை உருக்கியது.

அது மட்டுமல்ல இவர் சிறைக்காவலதிகாரியாகக் கடமையாற்றிய காலத்தில் சிறைக் கைதிகளும் மனிதர்கள், அவர்கள் சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டவர்கள் அல்ல, அவர்களிடத்திலும் பல ஆற்றல்கள் இருப்பதால் அவற்றையும் வெளிக்கொணர உதவலாம் என்ற நோக்குடன் அவர்கள் மத்தியிலும் கலையார்வத்தை வளர்த்தவர்.

சிறையில், காவலில் இருந்த கைதிகளை நடிகர்களாக்கி 'சங்கிலியன்', 'சீர்திருந்திய கைதி' போன்ற நாடகங்களை நெறியாக்கம் செய்து, முறையே வெலிக்கடை, யாழ் சிறைச்சாலை, யாழ், வீரசிங்கம் மண்டபம், குருநகர், அரியாலை போன்ற இடங்களில் மேடையேற்றி கைதிகள் மத்தியில் நல்லெண்ணத்தினை வளர்த்தவர்.

ஒரு முறை இவர் சிறைக் கைதிகளை நோக்கிப் போகும் போது சில கைதிகள் இவரைக் கண்டதும் "அதோ நாடகக்காரன் வருகிறார்'' என நகைச்சுவையுடன் கூறியதை இவர் என்னுடன் பகிர்ந்து கொண்டது எனது மனதில் இன்றும் நினைவிலிருக்கிறது.

தான் சார்ந்த சமூகத்திலும் பல நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றியவர். திருமறைக் கலாமன்றம் மேற்கொண்ட வெளிநாட்டு கலைப் பயணங்களின்போது, 1973 இல் இந்தியாவிற்கும் 1997, 1998 இல் ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்றார். இதன் போது ஜேர்மனி, பிரான்ஸ், லண்டன், சுவிஸ், ஹொலண்ட் போன்ற ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர் மக்கள் மத்தியில் கலைப்பணியாற்றி அதிக வரவேற்பைப் பெற்றுள்ளார்.

பிரபல சிங்கள கலைஞரான தர்மசேன பத்திராஜாவின் 'In Search of a Road' என்னும் ஆவணத் திரைப்படத்தில் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்தும், அசோக் ஹந்தகமலின் 'Take this Road' (இவ்வழியால் வாருங்கள்) தொலைக்காட்சித் தொடரிலும் நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அசோகா ஹந்தகயின் 2011 தயாரிப்பான 'Coming Home' என்று படத்தில் நடித்துள்ளார்.

இவ்வாறு ஐம்பது வருடங்களுக்கும் மேலாக நாடகத்துறையோடு அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு நடிப்பு, நெறியாள்கை, வேட உடை விதானிப்பு, ஆவணம் பேணுகை, களப்பயிற்சி வழங்குதல் என அரங்கோடு தொடர்புடைய பல்துறைகளிலும் தனது திறமையை வெளிப்படுத்திவருகின்ற G.P. பேர்மினஸ், திருமறைக் கலாமன்ற நிர்வாக செயற்பாடுகளிலும் பல்வேறு சமூக சேவைகளிலும் தன்னை ஈடுபடுத்தி வருகின்றார். இவரது கலைச்சேவையைப் பாராட்டி பலரும் பல்வேறு விருதுகளை வழங்கியுள்ளனர்.

03.12.2000 அன்று திருமறைக் கலாமன்றத்தால் 'அரங்கவாரிதி' என்ற பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்தி Dr. S. சிவலிங்கராஜா அவர்களால் கௌரவிக்கப்பட்டார்.

20.09.2002 அன்று யாழ். கலாசார பேரவையால் 'யாழ் ரத்னா' என்ற பட்டம் யாழ் வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் அருட்தந்தை நீ. மரியசேவியர் அடிகளாரால் வழங்கப்பட்டது.

19.11.2002 அன்று இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 'கலைஞான கேசரி' பட்டம் வழங்கி வீரமணி ஐயர் அவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

04.02.2004 அன்று கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் கொழும்பு ஜோன் டி சில்வா அரங்கில் 'கலாபூஷண விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

12.04.2008 அன்று திருமறைக் கலாமன்றத்தின் ஆரம்பகால உருவாக்கத்திலிருந்து இன்று வரை அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் மூத்த உறுப்பினர்களுக்கு திருமறைக் கலாமன்றத்தின் அதிஉயர் விருதான 'கலைஞான பூரணன்' விருது இயக்குநர் தந்தையால் வழங்கப்பட்டு, மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி அவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

## ஆழத்து முத்துக்கள் 75

2004ஆம் ஆண்டு மடுத்திருப்பதியின் பரிபாலகர் அருட்தந்தை பிலிப்பின் வேண்டுகோளின் பேரில் மன்னார் ஆட்காட்டி வெளிப் பங்கில் இயேசுவின் திருப்பாடுகள் 'பலிக்களம்' என்ற பெயரில் பிரமாண்டமாக மேடையேற்றப்பட்ட வேளை, மன்னார் ஆயர் மேதகு

**- ஆர்.எல். சேவியர் -**


இராயப்பு யோசேப் ஆண்டகை அவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப் ஆண்டகை அவர்கள் புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்விகற்ற காலத்தில் அவருடன் தானும் ஒன்றாக கல்விகற்றதைக் குறிப்பிட்டுக்கூறும் கலைஞர் G.P. பேர்மினஸ் அவரால் கௌரவிக்கப்பட்டதைப் பெருமையாகக் கொள்கின்றார்.

இவ்விதமான பல விருதுகளைப் பெற்ற G.P. பேர்மினஸ் அவர்கள் தற்போது வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலைஞர்களுக்கான உயர் விருதான 'ஆளுநர்' விருதினை 10.10.2009ல் பெற்றுக் கொண்டார்.

தனது கலைவாழ்விற்கு முன்னோடிகளாக இருந்த ஆசான்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும் அவர், தனது உயர்ச்சிகளுக்கான 'எல்லாப் புகழும், இறைவனுக்கே' என்று கூறுகின்றார்.

கலைஞர் G.P. பேர்மினஸ் அவர்களுடன் எனது தொடர்பு 1968ல் ஆரம்பமாகியது. யாழ் திருமறைக் கலாமன்றம் ஆரம்பமாகிய நாட்களிலிருந்து நான் இவரை நன்கு அறிவேன். இவரின் நடிப்பை அவதானிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இவரை நான் தனிப்படப் பாராட்டத் தவறுவதில்லை.

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு சிறந்த நாடகக் கலைஞராகவும், யாழ் திருமறைக்கலாமன்ற ஆரம்ப உறுப்பினர்களில் ஒருவராகவும் அதன் நிர்வாக அங்கத்தவராகவும் தொடர்ந்து பணியாற்றும் இவர் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியவர். இவரைப் பின்பற்றிய பல இளைஞர்கள் தங்களது கலை ஆற்றல்களை வெளிக்கொண்டு வருவார்கள் என்பது எனது திடமான நம்பிக்கை



xavier.raphael@thaiveedu.com


**உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி நீங்களும் எழுத வேண்டுமா?**

கலைஞர்கள் பற்றிய விபரங்கள்,
அவர்களுடைய புகைப்படங்களுடன்
உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம்
மற்றும் மின்னஞ்சல் முகவரியையும்
தாய்வீட்டுக்கு அனுப்பிவையுங்கள்.

**Thaiveedu**
**Woodside Square,**
**P.O.Box #63581**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**